அமைக்கப்பட்டிருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அதிலே செய்யப்பட்டிருக்கக்கூடிய முதலீடுகள் பூராவும் அந்தப் பகுதி மக்கள பயன்படுத்த முடியாமல்—மருத்துவர்கள் இல்லாததால்— இருக்கிறது. இருக்கின்ற சுகாதார நிலையங்களுக்கு உரிய மருத்துவர்களை நியமித்து அந்த நிலையங்கள் மக்களுக்கு பயன்படக்கூடிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கான பதில்களை நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். இந்த மானியத்தின் போதும் நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஏறக்குறைய இந்தப் பிரச்சினை குறித்து ஆயிரம் டாக்டர்கள் இப்போது நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு ஆணைக்குழு 934 பேர்களுக்கு பணியாட்களை, டாக்டர்களை நியமிக்க வேண்டும் என்று சொல்லி விளம்பரம் செய்துவிட்டு அது சுமார் 1400 மருத்துவர்களை தேர்வு செய்திருக்கிறது. அதை எதிர்த்து ஒருவர் வழக்கு தொடுத்திருக்கிறார். அதன் விளைவாக இப்போது சிறிது தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் கூட விரைவில் அனைத்துப் பகுதிகளிலும் மருத்துவர்களை நியமிப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ள இருக்கிறது.

**வேட்டவலம் ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்கல்.**

120.—(*வினா எண். 1026)—**திரு. கே. பிச்சாண்டி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை தொகுதி, வேட்டவலம் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மான்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** தலைவர் அவர்களே, இதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**திரு. கே. பிச்சாண்டி :** பேரவைத் தலைவர் அவர்களே, வேட்டவலத்தைச் சுற்றி சுமார் 35,000 மக்கள் வசிக்கிறார்கள். அரசு மருத்துவமனை சுமார் 30 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. சரியான பஸ் வசதி இல்லை. அந்த மக்களின் மருத்துவ வசதியைக் கருதி இனியாகிலும் வரும் நிதியாண்டில் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலையைக்கருத்தில் கொண்டு அரசு இதைப் பரிசீலிக்கும்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** தலைவர் அவர்களே, கிராமப் புறத்தில் உள்ள பிரதம சுகாதார நிலையமாக இருந்தாலும் சரி, வேறு எந்த மருத்துவமனையாக இருந்தாலும் சரி கிராமப்புறத்தில் இருக்கக் கூடிய மருத்துவமனையை அரசு மேற்கொள்வதில்லை என்று ஏற்கெனவே இருந்த அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்திருப்பதாக அறிவிக்கப்பட்டு உள்ளது. அந்த முடிவை மக்களுடைய நல்வாழ்வைக் கருதி மாற்றுவதற்கு இந்த அரசு முன்வருமா? அது மாதிரி உத்திரவே வந்திருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** கேள்வியை சரியாகச் சொல்லுங்கள்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே இருந்த அரசு கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய எந்த மருத்துவமனையையும் அரசு மேற்கொள்வதில்லை என்ற ஒரு உத்திரவை போட்டிருக்கிறது. அதை மாற்றுவதற்கு இந்த அரசு முன்வருமா?

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர் களுடைய கேள்வி சரியாக இருக்கும் என்று சொன்னால், லோக் கல் செல்ஃப் கவர்ன்மென்ட் அவைகளில் இருக்கின்ற மருத்துவமனைகள் பற்றிக் குறிப்பிடுகிறார் என்று கருது கிறேன். கிராமப்புறங்களிலே அரசாங்கமும் மருத்துவ மனைகளை நடத்திக் கொண்டிருக்கின்றன, ப்ரைமரி ஹெல்த் சென்டர் எல்லாம் அரசாங்கத்தால் நடத்தப் படுகின்ற மருத்துவமனைகள்தான். ஆகவே இதுபோன்ற தனிப்பட்ட குறிப்புகளை அவருடைய தொகுதியிலேகூட, நெல்லிக்குப்பம் நகராட்சியைப் பற்றி, அவர்கள் நடத்துகின்ற மருத்துவமனை யைப் பற்றி அரசு ஏற்று நடத்தவேண்டும் என்று கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அதைப்பற்றி கலந்து ஆலோசித்து முடிவுகள் எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]